


## World Evangelism

சகோதரிகள் கூட்டம் நாமக்கல் மாவட்டம்

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Feb. 2017

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 | பிப்ரவரி 2017 | கனி 3

## The Kingdom of God is within you
Lukr 17:21



## இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே
லூக்கா 17:21

**THE WORD OF CHRIST**

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக - கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# World Evangelism
## Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 49 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 49 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

# தமிழகத்தில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாதாந்திர வாசகர் கூட்டங்கள்




ஆகஸ்ட் 2016
காஞ்சிபுரம் மாவட்டம்




செப்டம்பர் 2016
நீலகிரி மாவட்டம்




அக்டோபர் 2016
கன்னியாகுமரி மாவட்டம்


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN
Associate Editor
K.R.K.Ravi Asir


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ்
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 198

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. கர்த்தர் தன்னை அடித்ததினால் தன் மரணநாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்த ராஜா யார்?
2. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை கர்த்தர் குலைத்துப்போட்டாரா?
3. நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து எடுத்த பொன் வெள்ளிப் பணிமுட்டுகளை பாபிலோன் கோவிலில் கொண்டுபோய் வைத்தானா?
4. பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்தோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. தொபியாவின் வீட்டுத் தட்டு முட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துவிட்ட அகலியாவின் குமாரன் பெயர் என்ன?
6. முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளலாமா?
7. தாய் தகப்பன் இல்லாத அத்சாளை வளர்த்தவன் யார்?
8. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை எப்படிப் பிரசங்கம் பண்ணவேண்டும்?
9. என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? என சொல்லும் தேவனுடைய தாசன் யார்?
10. நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், எது ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்?

**போட்டியாளர்கள் கவனிக்க...** வேதாகமம் பரிசு
ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் <u>இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம்</u>. நன்றி. – ஆசிரியர்

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்**

16


நாள்: 16.02.2017, வியாழக்கிழமை
நேரம்: காலை 11.00 மணி
இடம்: மு.சாலொமோன் காலேப்
தெற்கு தெரு, அமச்சியார் புரம் காலனி,
கூமாபட்டி -626 133
விருதுநகர் மாவட்டம்
தொடர்புக்கு: 93456 78975



சிறுவர் பகுதி

# தேறின வேதபாரகன்

*வேதபகுதி: எஸ்றா 7:1-10*



இஸ்ரவேலிலே தேறின வேதபாரகனாக எஸ்றா இருந்தான். இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் கிறிஸ்தவ ஊழியரின் பிள்ளைகள் பெரிய பெரிய வேலை வேண்டுமென முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ அப்படியில்லை தன் தகப்பனுடைய வழியிலேயே அவன் ஒரு சிறந்த வேதபாரகனாக இருக்கிறான். தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இப்படி அவன் இருந்தபடியால் கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. அதுமட்டுமா?

அர்த்தசஸ்டா என்ற ராஜா அவன் கேட்டதை எல்லாம் கொடுத்தார். எப்படி அவன் கேட்டதை எல்லாம் கொடுத்திருப்பான். அந்த அளவுக்கு எஸ்றா, ராஜாவின் பார்வையில் மிக நல்லவனாகவும், கர்த்தருக்கு பயப்படுகிறவனாகவும் இருந்தபடியால் தேவன் ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்திருக்கிறார். நாம் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யும்போது சகல ஜனங்களிலும் நமக்கு கிருபை கிடைக்கும்படி செய்வார். காரியங்களையும் கைகூடிவரச் செய்வார். இவையெல்லாம் நன்கு அறிந்த எஸ்றா சகலத்தையும் பெற்று அனுபவித்தான். நீங்களும் இந்த எஸ்றாவைப்போல வேதாகமத்திலும் ஆண்டவருடைய கட்டளைகளை மனப்பாடம் செய்வதிலும் அவைகளை கைக்கொள்வதிலும், தேர்ச்சி அடைவீர்களா! அப்படி தேர்ச்சி அடைவீர்கள் என்றால் கர்த்தர் எஸ்றாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார்.

மேலும், எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன் படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும், உபதேசிக்கவும், தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான். கர்த்தருடைய வேதத்தை கேட்கிற நாம் அதை குறித்து அசட்டையாக இருக்கலாமா? அநேகரை பாருங்கள் பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அடுத்தவனை கூப்பிடுவது, அடுத்தவனை கில்லி வைப்பது மேலே எதையாவது பார்த்துக்கொண்டு இருப்பது. இப்படியெல்லாம் செய்யலாமா? கூடாதே! பெரோயா பட்டணத்தார்களைப்போல ஆராயவும், அதன்படி செய்யவும் முயற்சிக்கவேண்டும். புதையல்களை தேடுகிறதுபோல தேடினால் தானே ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கமுடியும். அப்படிச் செய்வீர்களா! எஸ்றாவைப் போல வளருங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார். இந்த ஆண்டில் இப்படி செய்வீர்களா!

**மனப்பாட வசனம்:** “கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி, நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்” (எஸ்றா 7:10)



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 17 பிப்ரவரி -2017 கனி - 3

ஆசிரியருரை

## தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்தினாலே உண்டாயிருக்கிறது 1கொரி.4:20

## For The Kingdom of God Is Not In Word But In Power




**தே**வனுடைய ராஜ்யம் பலத்தோடு வரும் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் சொல்லியிருந்தார். அந்தப்படியாக வந்தது; "அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்.9:1). மிக சமீபமாக இருக்கக்கூடிய அவருடைய ராஜ்யத்தைக்குறித்து சொன்னார். ஆகையினால் இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்றார். இவைகள் தனியேல் புத்தகத்தில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. "அந்த ராஜாக்களின் நாட்களில், பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று வாசிக்கிறோம் (தானி.2;44).

உலகத்தில் தோன்றிய ராஜ்யங்கள் எல்லாம் தேவனால் அனுமதிக்கப்பட்டவைகளே. தேவனே ராஜாவாக இருந்தும் இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று உலக ராஜ்யங்களைப் பார்த்து கேட்டபடியினாலே அவர்களுக்கு ராஜாக்களையும் ராஜ்யங்களையும் ஏற்படுத்தினார். இந்த ராஜ்யங்களும் மற்ற ராஜ்யங்களும் நிரந்தரமான ராஜ்யங்கள் அல்ல. அவைகள் தற்காலத்துக்கேற்றவைகள். அவைகள் இரும்பும் வெண்கலமும் களிமண்ணும் கலந்த ராஜ்யங்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல்லுக்கு முன்பாக அவைகள் எம்மாத்திரம் அது மோதினவுடனே அவைகள் நொறுங்கிப்போயின. அந்தப்படியாக கிறிஸ்துவானவர் சிலுவையில் மரித்து

உயிர்த்தெழுந்து பெந்தெகொஸ்தே என்னும் நாளிலே மூவாயிரம் அங்கத்தினர்களுடன் அவருடைய மெய்யான ஆவிக்குரிய ராஜ்யம் ஆரம்பமானது. இந்த ராஜ்யத்திற்கு காத்திருந்த யோசேப்பை குறித்து நாம் லூக்கா 23:51-ம் வசனத்தில் படிக்கிறோம். "யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்துவந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்" என்று படிக்கிறோம். இந்த யூதனாகிய யோசேப்பு தானியேல் புத்தகத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய ராஜ்யத்திற்கு காத்திருந்தான். அது இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக அவருடைய ராஜ்யமாகிய சபை உருவாகப்போகிறது என்பதையும் அறிந்தவனாயுமிருந்தான்.


இந்த ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருந்தது. அப்போஸ்தலருடைய நாட்களில் வல்லமையோடு செயல்பட்டதை காண்கிறோம். பவுல் சொல்லும்போது; "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" என்றார் (1தெச.1:5). இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் எடுத்துச்சொல்லும்போது அது வெறும் வார்த்தையாக மாத்திரமல்ல வல்லமையோடு கிரியை நடப்பிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டவர்கள் முழுபெலத்தைப் பெற்றுக்கொண்டார்கள். உலகராஜ்யத்தின் காரியங்களுக்கும் செயல்பாடுகளுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. ஆகையால் மேலும் பவுல் சொல்லும்போது; "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" என்கிறார் (1கொரி.2:5). இன்றைக்கு பேச்சினால் சிலர் சிலரை மயக்கிவிடுகிறார்கள். அந்தவிதமான தந்திரமுள்ளதாகவும் நயவசனிப்புள்ளதாகவும் இல்லை. ராஜ்யத்தின் சுவிசேஷம் ஆவியினாலும் பெலத்தினாலும் வல்லமையுள்ளதாகவும் அது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக இயேசு அப்போஸ்தலர்களைப் பார்த்து சொன்னார்; "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8). இவர்களைப் பெலப்படுத்தினவர் கர்த்தர். அவர் சொன்னபடியே பெந்தெகொஸ்தே என்னும் ஐம்பதாவது நாளில் அப்போஸ்தலர்கள் முழுபெலத்தையும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக பெற்றுக்கொண்டார்கள். அதன்பின்பு கர்த்தருடைய வார்த்தையின்படி அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய வசனம் வல்லமையுள்ளதாயிருந்தது. முதலாவது எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்தனர் பின்பு உலகமெங்கும் கர்த்தருக்குச் சாட்சியாக அவர்கள் எடுத்துப் பயன்படுத்தப்பட்டனர். இன்றைக்கு நாம் கிறிஸ்தவர்களாகவும் அவருடைய ராஜ்யத்தின் சுவிகாரபுத்திரராகவும் இருக்கிறோமென்றால் அப்போஸ்தலர்களால் சொல்லப்பட்ட ராஜ்யத்தின் சுவிசேஷ வசனம் நமக்கும் வந்தடைந்தது. இது ஒரு உலகப்பிரகாரமான மார்க்கம் என்றால்



## *சபை*..........கிறிஸ்துவின் மணவாட்டி

**நம்முடைய கர்த்தர் பல மனைவிகளையுடைய ஒரு இருதார புருஷர் அல்ல.**

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து..." (எபே.5:25)




## *சபை*.........கிறிஸ்துவின் சரீரம்.

**நம்முடைய கர்த்தர் ஒரு தலையையும், பல சரீரங்களையும் கொண்ட ஒரு அசாதாரணப் பிறவி அல்ல.**

"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ.1:18).

## *சபை*..........கிறிஸ்துவின் ராஜ்யம். அவருடைய பிரஜைகள் அனைவரும் ஒரே ராஜ்யத்தில் உள்ளனர்.

"..........என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்: (மத்.16:18,19; கொலோ1:13).

## *சபை*..............கிறிஸ்துவின் குடும்பம். அது அவருடைய நாமத்தைத் தரிக்கிறது, அவருடைய ஜனங்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழுங்கால் படியிட்டு......" (எபே.3:14,5 ; ரோம.16:16; அப்.2:47).

## *சபை*...............அவருடைய இரத்தத்தினால் வாங்கப்பட்டது. அதில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா?

எபே.5:25,26; 1பேது.1:18,19; எபி.13:8; கொலோ.1:19–24; கலா.3:26,27.

**-The Voice of Truth International**

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்த வில்லையா? தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன், அவருடைய பலத்த கைக்குள் அடிங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்படவேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். “மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்” (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, “.....பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்....” (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? “....தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,....... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (யாக்.4:10).



இந்த அளவு வளர்ச்சியடைந்திருக்காது. இது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மார்க்கமாகையால் வல்லமையோடு செயல்பட்டது. அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் அநேக அடையாளங்களும், அற்புதங்களும் நடக்கும்படி கிருபை செய்தார். அது வெறும் வசனத்தோடே மாத்திரம் செயல்படவில்லை பரிசுத்தஆவியானவருடைய முழுபெலத்தோடே கிரியை நடப்பிக்கப்பட்டது. ஆகையால் அன்பானவர்களே, தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்தினாலே உண்டாயிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இந்த ராஜ்யத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இன்றைக்கு ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அநேகர் சொல்லிவருகிறார்கள். அந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமை பல இடங்களில் வல்லமையோடு செயல்பட்டு வருகிறது. நாம் அதை பலவந்தமாக சொல்லவேண்டியதில்லை. அதை ஏற்றுக்கொள் ளுகிறவர்கள், அதனுடைய மகிமையை கண்டுகொள்வார்கள். நாம் அதை திரித்து கூறவேண்டியதில்லை அல்லது கர்த்தருக்காக பொய்சொல்லவேண்டிய அவசியமுமில்லை. சிலர் சாட்சி சொல்லுகிறேன் என்று கூட்டியும் குறைத்தும் சொல்லுகிறார்கள். இதனால் கர்த்தருடைய ராஜ்யம் விரிவுபடுத்தப்படுமா? அப்படி செய்வதை தேவன் ஏற்றுக்கொள்வாரா? பொய்யினால் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டியதில்லை. அதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர் இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆண்டவர் இயேசு ராஜ்யத்தின் தலைவராகவும் அதன் அதிபதியாகவும் இருக்கிறார். அந்த அதிபதியை கொன்றுபோட்டனர். பரலோகத்தின் தேவன் அவரை மூன்றாம் நாள் எழுப்பி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அப்பொழுது இருந்த அரசு இதைக் கண்டு ஆச்சரியப்பட்டது. ஜனங்களும் ஆச்சரியப்பட்டனர். அதன் பின்பு கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை எடுத்துப் பயன்படுத்தினார்.

இந்த ராஜ்யத்தின் அங்கமாக நீங்கள் இருக்கின்றீர்களா? அப்படியானால்; "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.2:25). அநுதினமும் தேவனுடைய வார்த்தைகளை கேட்கிறோம், பேசுகிறோம் இவைகள் மட்டும் போதாது ஏனெனில் தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது. ஆகையால் இயேசுகிறிஸ்துவானவர் வரும்வரை நாம் பெற்றுக்கொண்ட இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பற்றிக்கொண்டவர்களாக இருக்கவேண்டும். சிலர் பாதியிலே விசுவாசத்தை விட்டு மறுதலித்துப்போய்விடுகின்றனர். தங்களுக்கு வரும் பாடுகள் பிரச்சனைகளினால் நிலைநிற்கமுடியாமற்போய்விடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பெற்றபடியினாலே ராஜவாழ்க்கை வாழ்ந்தார்களா? அநேகர் தவறாக புரிந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அநேக பாடுகளை ராஜ்யத்தினிமித்தம் அநுபவித்தார்கள். கொஞ்சங்குறைய அநேகர் மரணத்தை தழுவினார்கள். ஸ்தேவான் கல்லால் அடித்துக்கொலை செய்யப்பட்டான். யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டான். இவர்களெல்லாரும் ராஜ்யத்தின் நிமித்தமாக பாடுகளை அநுபவித்தார்கள். கர்த்தருடைய வார்த்தையின்படி சாட்சியுள்ளவர்களாக இருந்தார்கள். "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு

நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.12:1). எண்ணிலடங்கா வேதாகம சாட்சிகளைக் குறித்து நாம் தியானிக்கிறோம். நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் அதை முடிக்கிறவரும் இயேசுவே. இந்த விசுவாசத்தைக் காத்துக்கொண்டு இரட்சிப்பின் சுவிசேஷவசனத்திற்கு கீழ்ப்படிந்து ராஜ்யத்தின் பிள்ளைகளாக தொடர்ந்துநிலைத்திருங்கள். 1கொரிந்தியர் 13:1-முதல் சிலவசனங்களை நாம் வாசிக்கும்போது; "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்கதாகச் சகல விசவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" எனக் காண்கிறோம் (1கொரி.13:1-3). இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமை பேச்சிலே அல்ல என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். சிலர் நான் அந்த வரத்தைப்பெற்றிருக்கிறேன் இந்த வரத்தைப்பெற்றிருக்கிறேன் என்று சொல்லி பெருமை அடித்துக்கொண்டு திரிகிறார்கள். தேவன் அன்பாயிருக்கிறார். அவருடைய ராஜ்யத்தின் வேலைகளும் அன்பு நிறைந்ததாக இருக்கிறது. என் சரீரத்தையே சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் ஒன்றுமில்லை என்கிறார் பவுல். இப்படிப்பட்ட அகாப்பே அன்பு உங்களிடத்தில் இருக்கிறதா? அப்படியிருந்தாலே நீங்கள் பெலமுள்ள ராஜ்யத்தின் பிள்ளைகள். அந்நியபாஷை இரட்சிப்புக்கு அடையாளமாக இருக்கிறது என்கிறார்கள். ஒருவன் தேவதூதர் பாஷைகளை பேசினாலும் அவனிடத்தில் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை.

ஒபதியா என்ற தேவமனிதனை குறித்து நாம் 1இரா.18:4-ம் வசனத்தில் படிக்கிறோம். அவன் ஒரு ராஜ்யத்தில் வேலைசெய்துகொண்டு தன்னுடைய சொந்த பணத்தை செலவுசெய்து நூறு தீர்க்கதரிசிகளை காப்பாற்றி வந்தான். அப்பொழுது அந்த தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக அந்த ராஜ்யம் செயல்பட்டது. ஒபதியாவோ அந்த ராஜ்யத்தில் வேலைசெய்துகொண்டும் அந்த ராஜ்யத்திற்கு பயப்படாமல், தேவனுக்கு பயந்தபடியால் தேவனுடைய தீர்க்கதரிசிகளை போஷித்தான். இது அவனுடைய பெலத்தைக் காட்டுகிறது. பேசிவிடலாம் ஆனால் செயல்படுத்துவது மிக கடினம். ஒபதியாவோ எத்தனை கஷ்டத்தை அநுபவித்திருப்பான். அக்காலத்திலே பயங்கரமான பஞ்சம் அந்த பஞ்சகாலத்திலும் ஒபதியா தீர்க்கதரிசிகளை ராஜ்யத்திற்கு தெரியாமல் பராமரித்தான். தினமும் அப்பமும் தண்ணீரும் கொடுத்து அவர்களை அந்த ராஜ்யத்தின் கொலைவெறியிலிருந்து காத்தான். இன்றைக்கு நீங்களும் நானும் தேவனுடைய ராஜ்யத்தின் புத்திரராயிருப்போமானால், இந்த ஒபதியாவைப்போல தேவனுடைய ராஜ்யம் பெலத்திலே உண்டாயிருக்கிறது என்பதை நம்முடைய நற்கிரியை மூலமாக ஜனங்களுக்குக் காண்பிக்க முடியும்.

**ராஜ்யத்தின் புத்திரரைக்குறித்து சொல்லப்படும் முடிவு என்ன?**

"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும்



# நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?
# Should You Be Exalted?

-Glory Arjunan

அன்பான சகோதரிகளே இப்புத்தாண்டில் புதுப்பொழிவுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் இவ்வருடத்தை நமக்கு கூட்டிவழங்கியுள்ளார். இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் 'பெருமை' மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்தவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்....." (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து ".....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களை பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார், கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள்.

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீன மாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.

✦ஸ்திரீயினது தலைமயிர் அவளுக்கு துணியாலான முக்காட்டிற்குப் பதிலாக (முக்காடாக) கொடுக்கப்பட்டிருக்கிறது.

✦தலையின் முக்காடு என்பது தேவனால் ஒழுங்குப்படுத்தப்பட்டது கூடுதலாக துணியிலான முக்காடு பல வித்தியாசமான கலாச்சார நடைமுறைக்கேற்ப ஏற்படுத்தப்படுவதேயாகும், வேதாகமத்தில் உள்ளதல்ல.

## நடப்புச் செய்திகள்

**✦ ஜனவரி 1-ந்தேதி முதல் புறநகர் ரெயில் நிலையங்களில் ஸ்வைப் மெஷின்கள் – தெற்கு ரெயில்வே அறிவிப்பு.**

**✦ மத்திய அரசு 6 புதிய அன்னிய நேரடி முதலீட்டு திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.**

**✦ போதிய மழை பெய்யாததால் அணைகளில் நீர் மட்டம் குறைந்து வருகிறது இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.**

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**


Contact: 94435 58041
**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**






உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.8:11,12). இந்த வசனத்தைக் கேட்கும்போது மிகுந்த மனவேதனை உண்டாகின்றது. ராஜ்யத்தின் புத்திரராய் வாழ்ந்தவர்களுக்கு கிடைக்கப்போகும் முடிவு அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். ஏன் இந்த நிலை? இயேசு சொல்கிறார்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்றார் (மத்.7:21). தேவனுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி வாழாதவன் ராஜ்யத்தின் புத்திரனாயிருக்கமாட்டான். நீங்கள் தேவனுடைய சித்தம் செய்தால் நித்தியமான ராஜ்யத்தை சுதந்தரிப்பீர்கள். நீங்கள் சுதந்தரிக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## பொது அறிவுச் சோதனை

**1. இந்தியாவில் முதன் முதலில் மின்சார ரெயில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?**
**அ)1935 ஆ)1955 இ)1925**

**2. அமைதியின் மனிதர் என்று அழைக்கப்பட்ட இந்திய தலைவர் யார்?**
**அ)ஜவஹர்லால்நேரு ஆ)மகாத்மாகாந்தி இ)காமராஜ்**

**3. முதன் முறையாக விண்வெளியில் இருந்து உலகை வண்ணப்படம் பிடித்தனுப்பிய செயற்கைகோள் எது?**
**அ)சோயுஸ்-டி.எம்.13 ஆ)டைரோஸ்-1 இ)கொலம்பியா**

**4. அரபிக்கடலின் அரசி என்று அழைக்கப்படும் இடம் எது?**
**அ)கொச்சி ஆ) கன்னியாகுமரி இ)மும்பை**

**5. புற்றுநோயை குணப்படுத்துவது எது?**
**அ) சோடியம் – 24 ஆ) கோபால்ட்-60 இ)கார்பன் – 14**

**விடைகள்: 1.1925**
**2.மகாத்மாகாந்தி**
**3.சோயுஸ் டி.எம்.13**
**4.கொச்சி**
**5.கோபால்ட் – 60**

தெரிந்து கொள்வோம்

## தெரிந்த பெயர் தெரியாத செய்தி

K.R.K.Ravi Asir, Associate Editor

▶ பந்தியன் சாலை: பாந்தியன் என்ற பெயரில் முன்பு ஒரு சர்ச் இந்தப் பகுதியில் இருந்தது.

▶ சேமியர்ஸ் சாலை: ஹென்றி சேமியர்ஸ் என்பவர் 'மெட்ராஸ் கிளப்' பை நிறுவியவர். எனவே அடையாற்றின் கரையில் இருக்கும் 'மெட்ராஸ் கிளப்' நோக்கிச் செல்லும் இந்த சாலைக்கு அவர் பெயரால் 'சேமியர்ஸ் சாலை' என்று பெயரிட்டுள்ளனர்.

▶ கோடம்பாக்கம்: 18-ம் நூற்றாண்டில் அடையாற்றும் போர் நடந்த சமயம் இந்த பகுதியில் குதிரைகளை கட்டி வைத்து பெரிய 'லாய'மாக வைத்திருந்தனர். இந்தியில் 'கோடா" என்றால் குதிரை என்று பொருள், எனவே அந்தப் பகுதியை 'கோடா பாக்' என அழைத்தனர். இப்பொழுது இது கோடம்பாக்கம் ஆகிவிட்டது.

▶ சேத்துப்பட்டு: இந்த பகுதியில் நல்ல நஞ்சை நிலங்கள் முன்பு இருந்தன தமிழில் 'பற்று' என்றால் நஞ்சை நிலம் என்று பொருள். இது சேற்றுப் பகுதியாகவும் இருந்ததால் 'சேற்றுப் பற்று' என அழைக்கப்பட்டு, இதுவே மருவி 'சேத்துப்பட்டு' ஆகிவிட்டது.

▶ எழும்பூர்: இந்த பகுதியில் உள்ள பெருமாள் கோவில் ஏழு ஊரைச் சேர்ந்த பெரிய 'மிராசு'கள் நடத்தி வந்தார்கள். இதுவே 'ஏழுவூர்' ஆகிவிட்டது. (பிரிட்டிஷ் ஆட்சியில் 'எழும்பூர் என உச்சரிக்க முடியாது நாளடைவில் 'எக்மோர்' ஆவிவிட்டது.

# புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிறோம்?

## Why we Preach The New Birth?

*J.C.Choate*



புதிய பிறப்பு என்றால் என்ன? அது ஒரு நல்ல கேள்வி உண்மையான விஷயமாக அந்த கேள்வி பலமுறைகள் கேட்கப்பட்டு பல்வேறுபட்ட பதில்கள் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிகமானோர் இது என்ன என்பதை அறியத் தவறினவர்களாகவே இருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள் ஒரு தனிமனிதன் கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபோது ஒரு அற்புதமான மாற்றம் அந்த மனிதனின் வாழ்வில் ஏற்படுகிறதே புதிய பிறப்பு என விளக்கமளிக்கின்றனர். ஆனால் இதைக்காட்டிலும் மேலான ஒன்று நிச்சயமாகவே நடைபெறுகிறது.

யோவான் 3-ஆம் அதிகாரத்திற்குத் திரும்புகையில் கிறிஸ்து இந்த புதிய பிறப்பைக் குறித்து பேசுகிறதை அல்லது ஒருவன் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதைக் கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பும் உடன்படிக்கையாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பும் இந்தக்காரியம் போதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் கிறிஸ்துவின் உடன்படிக்கை, அல்லது கிறிஸ்தவம் நடைமுறைக்கு வந்திருந்த போது எது அவசியமாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இது போதிக்கப்பட்டது. இது இராஜ்யத்தின் வருகைக்கு முன் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே போதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் இராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டது ஒருவன் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்படிக்கு அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஆனால் நாம் இந்த புதிய பிறப்பினைக் குறித்து இப்போது வாசிப்போம். வேதவாக்கியம், “யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எண்ணப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் அதற்கு நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச்



கத்தரித்துப்போட்டு முக்காடிட்டுக் கொள்ளாமல் தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்பவில்லை என்பதை விளக்குவதாகும்.

வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள இந்தக் குறிப்பிட்ட “முக்காடிட்டுக்கொள்ளுதல்” என்ற வினாவானது கலாச்சார வழக்க மாற்றத்திற்கேற்ப மாற்றப்படுதற்கில்லை. இது அதிகாரமுடைய தேவனுடைய கட்டளையைச் சார்ந்ததாயும், மேலும் ஸ்திரீ - புருஷன் இவர்களது நடைமுறையும் தோற்றமும், ஆதாம் ஏவாலுடைய காலத்திற்கு அழைத்துச் செல்லுகிறதாகவுமிருக்கிறது.

ஆனால் இங்கே முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய கேள்வி, தன்னுடைய கலாச்சார காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் பாவமில்லாததாகவுமிருக்கிறது.

தங்களுடைய திருமணத்திற்கு முன் ஈசாக், ரெபெக்காளைக் காண்பதற்கு வயல்வெளியிலே வருகிறதை ரெபெக்காள் கண்டபோது, “அவள் முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள்” என ஆதியாகமம் 24:65 கூறுகிறது. திருமணமாகாத பெண்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொள்வது அந்த இடத்தின் கலாச்சார வழக்கம் என தெளிவுபடுத்துகிறது.

இருந்த போதிலும், தாமார் யூதாவை வேசிதனத்துக்கு உட்படுத்த, “...... அவள் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு (முக்காட்டுத் துணி என தெளிவாக வெளிப்படுத்தபடவில்லை) முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு.......” என ஆதி. 38:14ல் நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தின் கலாச்சார வழக்கத்தில் முக்காடு வேசிக்கு அடையாளமாக மாறியிருந்தது.

“...... அவள் அழகுள்ளவளானபடியால்” (ஆதி. 12:14, 26:7) சாராளும், ரெபெக்காளும் எகிப்து, பெலிஸ்திய ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். என வாசிக்கிறோம். அந்நாட்களில் அவ்விடத்து வழக்கம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தவில்லை என்பதை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

இன்று பெண்கள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஒழுக்கமற்ற செயல் அல்லது கணவனுக்கு அவமதிப்பை கொண்டுவரும் செயல் என கலாச்சார வழக்கத்தில் கருதப்பட்டால் கலாச்சார வழக்கத்தைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக கலாச்சாரத்தை மதிப்பது ஞானமுள்ளதாக இருக்கும் அல்லது தன் கணவனுக்கு கீழ்ப்படியும் மனைவி என்பதைக் காண்பிக்க வேறு ஏதாவது ‘அடையாளம்’ சமுதாய வழக்கத்தில் இருக்குமானால் அந்த வழக்கத்தை பின்பற்றுவது சிறந்ததாக இருக்கும் அப்படியானால் அவள் “........விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.” (1 தீமோ 5:14)

இப்பகுதியின் முடிவுரையில் இதுவரையில் பார்த்த எல்லாக் கருத்துக்களையும் மறுபடியும் காண்போம்.

✦இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். புருஷனுக்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறான். புருஷன் ஸ்திரீக்காக உண்டாகப்பட்டவனல்ல, புருஷனானவன் தேவசாயலும் மகிமையுமாயிருக்கிறான். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷனிலிருந்து தோன்றின வளாயுமிருக்கிறாள்.

✦இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும்

**ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?**

## Is A Woman Required To Cover Her Head While Praying?

*-Betty*

பெண்கள் பகுதி



ஸ்திரீயானவள் கண்டிப்பாக ஒரு துணியினால் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்ற போதனையைத் தெரியப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் சித்தம் கொண்டிருப்பாரென்றால் ஏன் மற்ற வசனங்களிலும் மிக திட்டமான வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. பதிலாக அவர் முக்காடிடுதல் என்ற பதத்தை மாத்திரமே பயன்படுத்தினார் மேலும் ஸ்திரீயினது தலைமையிரே முக்காடாகக் கொடுக்கப் பட்டுள்ளது என தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர் அவளது தலைமையிரானது ஒரு முக்காட்டுத் துணியல்ல அவளுக்கு மகிமையாக இருக்கிறது என விளக்கமளிக்கிறார்.

இதற்கு மாறாக புருஷனுடைய தலை மூடிக்கொள்ளப்பட வேண்டியதில்லை. எல்டார்டு எக்லோஸ் இதுபற்றி “அவன் தலை மூடப்பட்டிருத்தல்” என்பது ஒரு வியாக்கியானமே தவிர இது ஒரு மொழிபெயர்ப்பல்ல என எழுதினார். “அவனது தலையிலிருந்து ஏதோ தொங்கி கொண்டிருத்தல்” என லென்ஸ்கி மொழிபெயர்த்துள்ளது சரியானதாக உள்ளது.

1. கொரிந்தியரைக் குறித்த இவரது வியாக்கியானத்தில் பெட்டன் கோஃப்மேன் கூறுகிறார், விவாதத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய இந்த கருத்து பின்பு அப்போஸ்தலரால் “புருஷன் தலைமயிரை நீளமாக வளர்க்கிறது. அவனுக்குக் கனவீனமாயிருக்கிறது” (வச.14) என தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது போல தலையிலிருந்து வேண்டிய அளவு நீளமாகத் தொங்கி கொண்டிருத்தல் என்பது “நீளமான தலைமயிர்” என்ற பதத்திற்கு ஒப்பிடப்படும்.

2ம் நூற்றாண்டில் இதுபற்றி கிளமென்ட் அலெக்சாண்டர் தன்னுடைய கூற்றில் புருஷனுடைய தலைமயிர் நீளமாயிருப்பதைக் குறித்து இவ்விதமாக எழுதுகிறார்; தலைமயிரானது நீளமாக கீழே தொங்கி கண்களை மறைப்பதைபோல வளர்வதில்லை....... கத்தரிக்கப்படவேண்டியதாயிக்கிறது.... ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்வது போல தலையிலிருந்து பின்னப்பட்டு தொங்கவிடப்படலாகாது”. (Ante Nicene Fathers, Wm B.Eerdmans Publishing Co., லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது)

நிச்சயமாக ஸ்திரீயானவளைக் காட்டிலும் புருஷனானவன் தன் தலைமயிரை குட்டையாக அடையாளப்படுத்தி கொண்டிருப்பது உண்மையென சுபாவமே தெளிவுபடுத்துகிறது போல வரலாறு முழுவதும் உலகமுழுவதும் இது பொதுவான உண்மையாகக் கருதப்படுகிறது. இது புருஷன் சிறிதளவுகூட தலைமயிரை வைத்துக்கொள்ளக்கூடாது என பொருள்படுவதில்லை. “நீளம்” என்பது சென்டிமீட்டர் அல்லது இஞ்சில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது நமது உடலின் ஒரு பாகமாயிருக்கிறபடியால் சரீரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்க தலைமயிரை நீளமாக வளர்ப்பது உதவியாகயிருக்கிறது.

இந்த பகுதியின் நோக்கம்: புருஷர்கள் ஒரு ஸ்திரீயினுடைய தோற்றத்தை உடையவர்களாய் ஆராதனையில் தமக்கு முன் வந்து தம்மை கனவீனப்படுத்துவதை தேவன் விரும்பவில்லை. ஒரு கிறிஸ்தவ பெண்ணும் நாகரீகமென்று புருஷனைப்போல தன் தலைமயிரை குட்டையாகக்



சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசிவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவருமில்லை (யோவா. 3:1-13).

முன்னதாக குறிப்பிட்டவற்றிலிருந்து, தயவு செய்து இதன் அமைப்பைக் கவனியுங்ள். நிக்கொதேமு என்னும் பேருள்ள ஒரு மனிதன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் பரிசேயனாகவும் யூதருக்குள்ளே அதிகாரி யாகவுமிருந்தபடியினால், இவன் தன்னுடைய சந்திப்பு ரகசியமாகயிருக்க வேண்டுமென அவன் அந்த நேரத்தில் வந்திருப்பான் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் யூதமத பிரிவைச் சேர்ந்தவர்களாக யிருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதர்களும் உண்டென நம்பினார்கள். யூதர்களுடைய அதிகாரியாக இருப்பதென்பது அவன் ஒரு மூப்பனாகவும் மதிப்பிற்குரிய ஒரு பதவியை உடையவனாகவும் இருந்திருக் கின்றான் என்று அர்த்தமாகிறது. எப்படியாகிலும் இயேசுவினிடத்தில் வருகையில் அவன் அவரிடத்தில் விசுவாசமுள்ளவனாக இருந்தவன் எனக் குறிப்பிடுகிறான், அத்தோடுகூட அவன் இயேசுவினிடத்தில் ரபீ அல்லது போதகர் என்றும் மேலும் இயேசு அற்புதங்களைச் செய்ய வல்லமையுடைய வராயிருக்கிறபடியினால், இது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது எனவும் குறிப்பிடுகிறான். அதற்கு இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக்காண, அவன் மறுபடியும் பிறப்பது அவசியமா யிருக்கிறது என்ற திட்டத்தினை அங்கு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து என்ன சொல்லிக்கொண்டிருந்தாரென நிக்கொதேமு அறியாதபடியினால் இது அவனை குழப்பமடையச் செய்தது பின்பு அவன் ஒருவன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதை அறிய விரும்பினான். அவன் தொடர்ந்து அந்த மனிதன் தன் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அவன் அவ்வாறு பிறக்கமுடியாது, இயேசுவும் இவ்விதமான அர்த்தத்தில் போதிக்கவும் இல்லை. கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய பிறப்பினைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார் ஆனால் நிக்கெதேமு ஒரே பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தபடியினால் அவன் சரீரப்பிரகாரமான பிறப்பினைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சியாக இயேசு திரும்பவும் புதிய பிறப்பினைக் குறித்து பெரிய விளக்கத்துடன் தெளிவுப்படுத்தினார். ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது

அவசியமாயிருக்கிறதென்றும் இதைத்தவிர அதில் பிரவேசிப்பதற்கு வேறொரு வழியே கிடையாது என்றும் இன்னும் பல வார்த்தைகளின் மூலம் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் இந்த வார்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்ந்து பார்ப்போமாக முதலாவது அவர் ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று சொன்னதை கவனியுங்கள். பிறக்க வேண்டுமென்பது வரக்கூடிய ஒன்று. ஒரு பிறப்பு என்பது புதியவாழ்வை குறிப்பாகத் தெரிவிக்கிறது. ஆனால் தண்ணீரைப் பற்றிய காரியமென்ன? இயேசு நிக்கெதோமுவுக்கு இரண்டாம் முறை ஒருவன் தன்தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து மறுபடியும் பிறப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது என விளக்கினபடியினால் சரீரப்பிரகாரமான பிறப்பிற்கு தண்ணீர் ஒன்றும் செய்கிறதில்லை. நாம் இந்த "தண்ணீரை குறித்து நினைக்கையில் இன்னொரு விதியையும் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டும் அதாவது மற்ற எல்லா இடங்களிலும் இது எங்கு பயன்படுத்தப்படுகிறது இது ஆவிக்குரிய தண்ணீரென்றால் அது யோசனை செய்ய வேண்டிய ஒன்று, இது ஜீவத்தண்ணீராகச் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இது வெளிப்படையான தண்ணீரில்லை என்பதை குறிக்கும் ஒன்றாகும். இன்னொரு வகையில் பல வசனங்களில் தண்ணீர் என்ற வார்த்தை காணப்படுகிற இடத்தில் இது வெளிப்படையான அல்லது உண்மையான தண்ணீர் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தப்படும் வழி என்ன? தண்ணீர் என்ற வார்த்தை மட்டும் குறிப்பிடப்படுகையில் நாம் அவர் உண்மையான ஜலத்தைப் பற்றி பேசினார் என்ற முடிவுக்கு வரவேண்டும். இப்போது அடுத்த கேள்விக்குச் செல்வோம். தண்ணீரோடு சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேதவாக்கியத்தில் நாம் என்ன செய்ய கட்டளையிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வார்தையை நன்கு அறிந்தவர்களாக இருப்பீர்களென்றால் நீங்கள் அங்கே ஒரே ஒரு கட்டளை அல்லது செயல், அதாவது தண்ணீரோடு சம்பந்தமுள்ளதும் அது ஞானஸ்நானமே என்பதையும் அறிந்துகொள்வீர்கள் அப்போஸ்தலர் 8:26-39-ல் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதன் கிறிஸ்துவைப்பற்றி போதிக்கப்பட்டவனாகி அதன்பின் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனாக இருந்தான் என நாம் வாசிக்கிறோம். இத்தோடுகூட ஒருவன் தண்ணீர் முழுக்கினால் கண்டிப்பாகப் பிறக்க வேண்டுமென கிறிஸ்து சொன்னார். ஒருவன் தண்ணீர் முழுக்கினால் எவ்வாறு பிறக்கமுடியும்? நல்லது இங்கே ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் குறிப்பிடப்பட்டிருக்குமானால் தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோ 2:12), மேலும் தண்ணீரில் அடக்கம் என்றால் பிறகு ஒருவன் அந்த தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது வெளித்தோன்றுதல் அல்லது ஒரு பிறப்பின் அனுபவம் என்று அர்த்தமாகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுல்



நாம் எவ்வாறு இந்த மனநிலையைப் பெற முடியும்? அன்பு ஒன்றே உந்து சக்தியாகும். எவ்வித காரணமுமின்றி நாம் செய்வோம் என அன்பில்லாமல் நாம் காரியங்களைச் செய்ய முடியும். யோவான் 13:1-ல் இயேசு தம்முடைய சீஷர்களை கடைசி வரை நேசித்தார். அவருடைய அன்பு அளவற்றதாக இருந்தது என்பதை நாம் காண்கிறோம். மேலும், யோவான் 13;3-ஐ கவனியுங்கள் இந்த சுருக்கத்தில், இயேசு இம் மனநிலையைப் பெற மூன்று காரியங்களைக் கொண்டிருக்கும்படி அனுமதித்தார் என்பதை நாம் கூறலாம்.

**அவர் தாம் யார் என்பதை அறிந்திருந்தார். அவர் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருந்தார். அவர் எங்கிருந்து வந்தார் என்பதை அறிந்திருந்தார். அவர் தாமே பரலோகத்தின் மகிமைகளை விட்டு விட்டார் என்பதை அறிந்திருந்தார்.** மேலும் அவர் எங்கே செல்லுகின்றார் **என்பதையும் அறிந்திருந்தார்.**

அவர் மறுபடியும் பிதாவோடு கூட என்றென்றும் வாழும்படிக்குச் சென்று கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த மூன்று காரியங்களை அறிந்திருக்கிறோம். நாம் ஒரு சமயம் பாவத்தில் அழிந்தவர்களாயிருந்தோம் என்பதை அறிவோம். இப்போது நாம் தேவனுடைய புத்திர சுவிகாரர்களாக ஆகிவிட்டோம் என்பதை அறிவோம். மேலும் நாம் தேவனுடைய வாரிசாக அவரோடுகூட இணைந்திருக்கப்போகிறோம் என்பதையும் அறிவோம். இது நம்மை மிகவும் பலமுள்ள ஜனங்களாக இந்த பூமியில் உருவாக்கும். மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி மாத்திரமே தனித்தனியாக மிகவும் பலமுள்ளவர்களாயிருக்கும்படி நம்மை தகுதிப்படுத்தும்.

சந்தோஷத்திற்கான சாவி இதுவென்று மற்றவர்களும் கூட உணருகிறவர் களாயிருப்பார்கள். ஆல்பர்ட் ஸ்வர்ட்ஷர் ஒரு உலக புகழ்பெற்ற பாடகரும் தத்துவ ஞானியுமாவார். தனது 30 வது வயதில் மருத்துவ கல்லூரியில் நுழைந்தார். பட்டம் பெற்றபின், அவர் கேபன், ஆப்பிரிக்காவுக்குப் பயணம் செய்து தனது வாழ்வில் மீதமுள்ள நாட்களை அதிகமாக மருத்துவத் தேவையிலிருக்கும் ஜனங்களுக்கென்று செலவு செய்து சேவைசெய்தார். அவர் 1952-ம் ஆண்டு நோபள் பரிசு பெற்று அவர் பெற்ற பணத்தை ஆப்பிரிக்கா விலுள்ள தனது மருத்துவமனையை விரிவுபடுத்த பயன்படுத்தினார். சந்தேக மில்லாமல், அவர் தியாகம் செய்து, ஆப்பிரிக்கக் காடுகளில் பல கஷ்டங்களை சந்தித்து, கடினமான வாழ்வு வாழ்ந்தார்.

அவர் தனது வாழ்வு முடியப்போகும் சமயத்தில் கூறிய கூற்று: "உங்களுடைய விதி எப்படியிருக்கும் என எனக்குத்தெரியாது, அனால் ஒன்றை நான் அறிவேன்; உங்களில் எவன் ஒருவன் சேவை செய்யும் வழியைத்தேடி கண்டுபிடிப்பானோ அவனே உண்மையான சந்தோஷமுடைய வனாயிருப்பான்" என்றார்.


இன்று உண்மையிலேயே நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்களா? தாழ்மையான சேவையில் அந்த சாவி கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக, இந்த சாவி ஒவ்வொரு வருக்கும் உபயோகப்படுத்தக்கூடியது.

நீங்கள் பணக்காரரோ அல்லது ஏழையோ, படித்தவரோ அல்லது படிக்காதவரோ, எந்த நாட்டவரோ என்பது முக்கியமல்ல. சந்தோஷம் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் அன்பினிமித்தம் விருப்பத்துடன் சேவை செய்வதினால் வருகிறது. ஒவ்வொருவரும் விரும்புகின்ற ஒரு வேலைக் காரனாக வாழும் போது நீங்கள் உள்ளான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மனதிருப்தியையும் கண்டு கொள்ளுவீர்கள். எனவே இது வல்லமையுடைய தேவனின் வாக்குத்தத்தம். இதை நீங்கள் நம்புவீர்களா?

**-இச்செய்தி கைபிரதியாகவும் உள்ளது.**

# சந்தோஷத்தின் சாவி

## The Key to Happiness *- Jerry Bates*



**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**யோ**வான் 13-ல் இயேசு நமக்கு நிலையான சந்தோஷத்திற்கான சாவியைக் கொடுக்கிறார்; எப்படியென்றால், இது மனிதன் பார்ப்பதிலிருந்து முழுவதும் வேறுபட்டிருக்கிறது. நாம் அழைக்கிறதான "பஸ்கா பண்டிகையின்" போது, இயேசு தமது நினைவு விருந்தினை ஸ்தாபிக்கும் போது, வெளிப்படையாக தம்முடைய சீஷர்களிடம் தாம் சீக்கிரமாக மரிக்கப் போகிறேன் என்று சொன்னார். உண்மையாகவே, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவர் மரிப்பார் இப்படியாக பந்தியிலிருக்கும் போது, நினைத்து பார்க்காததை இயேசு செய்தார். அவர் வஸ்திரங்களை கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, சீஷருடைய கால்களைக் கழுவினார். அந்த நாட்களில், ஜனங்கள் சந்தன மரத்தாலான செருப்புகளை அணிந்தார்கள். அவர்களுடைய பாதங்கள் அழுக்கான பாதைகளில் அவர்கள் நடக்கையில் அழுக்காக மாறும். இப்படியாக ஒரு விருந்தளிப்பவரும் விருந்தாளிகளுடைய பாதங்களை கழுவி விடுவார், இது மிகவும் தன்னை தாழ்த்துகிற செயல். விருந்தளிப்பவர் அடிமைகளைக் கொண்டபோதுமான வசதிபடைத்தவராக இருப்பாரென்றால், இச்செயல் ஒரு அடிமையினால் செய்யப்பட்டது. இக்காரியத்தில், அங்கே விருந்தளிப்பவர் இல்லை, சீஷர்களில் ஒருவர் கூட பாதங்களைக் கழுவும்படி தங்களைத் தாழ்த்த முன்வரவில்லை. அதன் விளைவு அந்த அறையே பெருமையுள்ள இருதயங்களாலும் அழுக்கான கால்களாலும் நிறைந்திருந்தது. இயேசு பிறகு எழுந்து அவர்கள் பின்பற்றும்படி மாதிரியைக் கற்றுக்கொடுத்தார். இராஜாதி இராஜா இந்த தாழ்மையான செயலை செய்து நிறைவேற்றினார். 21-ம் நூற்றாண்டில் மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி சமநிலையில் உள்ளவர்களாயிருக்கும்படி விரும்புகின்றனர் - அவர்கள் யாராயிருந்தாலும் பராவாயில்லை, எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை, இந்தச் செயல் எவ்வளவு சந்தோஷமற்ற செயல்.

சந்தோஷத்திற்கான சாவி யோவான் 13:17-ல் காணப்படுகிறது. "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்". பாக்கியவான்கள் என்பதற்கு கிரேக்க மொழியில் கஷ்டம் என சரியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சந்தோஷம் என்பதன் அர்த்தத்திற்கு மிக நெருக்கமான வார்த்தை உள்ளான சந்தோஷம், இது வெளிப்படையான சூழலைச் சார்ந்துள்ளது அல்ல என விவரிக்கப்பட்டுள்ளது. இயேசு மெய்யான சந்தோஷம் அடுத்தவர்களுக்கு சேவை செய்வதில் மட்டுமே காண முடியும் என நமக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். இது நமக்கு உணர்வைக் கொடுக்கிறதில்லை. நாம் ஒரு வேலைக்காரனாக இருப்பதிலிருந்து சந்தோஷத்தைப் பெறமுடியும் என நினைப்பதில்லை. இதற்கு எதிர்மறையானது அதிகமதிகமான உணர்வை நமக்குக் கொடுக்கிறது. ஆனால் அப்படியல்ல, தேவசித்தத்தின்படியே. இயேசுவும் கூட, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மத்.23:11) என்றார்.



ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது என இங்கே விளக்குகிறார். (ரோம. 6:3,4).

ஜலத்தினால் பிறந்திருத்தல் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுத்தலைப் பற்றி தொடர்ந்து நாம் சிந்திக்கையில், ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் அவன் வெளித்தோன்றியிருக்கிறான் அல்லது ஒரு வாழ்வை பெற்றிருக்கிறான் என நாம் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் அப். பவுல் ரோமர் 6:3-லும் கலா. 3:26,27-லும் ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லுகிறபடியினால் இது தண்ணீரோடு இணைக்கப்பட்டுள்ளது. பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எ;லலாம் புதிதாயின" (2 கொரி 5:17) என்றான். கிறிஸ்தவர்களிடம் பேதுரு சொன்னபோது, "நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேது 2:3) என்றான்.

இரண்டாவதாக கிறிஸ்து ஒருவன் ஆவியினால் பிறந்திருக்க வேண்டும் என்று சொன்னார் இங்கே அந்த ஆவியானவர் யார்? பவுல் எபேசியர் 4:4 ல் ஒரே ஆவியும் உண்டு என்றான் மேலும் அந்த ஆவி எப்படியிருக்கும்? அவர் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவி (யோவா 14:26; அப் 1:8; அப் 2:38; 1தெச.4:8) ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்னவாயிருந்தது? ஒரு காரணம் அவர் அப்போஸ்தலர்களை வழிநடத்தினார். மேலும் மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். அதற்கு முன்பாக அவர் தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு முற்காலத்து பரிசுத்தமனுஷர்களை வழிநடத்தினார். (2பேது 1:21) வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று பவுல் எழுதினான் (2தீமோ. 3:16,17) ஆனால் அந்த ஆவியின் வார்த்தையில் அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சத்தியம் (யோவா 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16), அல்லது ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் (அப். 2:37,38). ஒருவன் ஆவியானவரின் வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படியமாட்டானா? பேதுரு தன்னுடைய நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "...நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாமிசமெல்லாம் புல்லைப்போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய

வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேது 1:22 - 25). ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து யோவான் 3:5ல் சொன்னதை கவனியுங்கள் ஆனால் 1 பேதுரு 1:23ல் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிபிக்கப்பட்டீர்கள் என தேவஆவியினால் ஏவப்பட்ட மனிதன் கூறினான். ஆனால் யார் அந்த வார்த்தையைக் கொடுத்தது? ஆவியானவர். ஆனபடியினால் ஆவியினால் பிறப்பதும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதும் ஒன்றே. ஆனால் விசுவாசம் எப்படிவருகிறது? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோம. 10:17). பின்பு ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படிவான், அவன் அதற்குக் கீழ்ப்படிந்தால் அவன் ஞானஸ்நானம் பெறுவான் அல்லது தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு இவ்விதமாக அவன் இரட்சிக்கப்படுவான் (கொலோ 2:12; மாற். 16:16) அதுவே பேதுரு 1பேது 1:23ல் கூறியவை; அதாவது நாம் பரிசுத்த ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஒருவனை வழிநடத்துவது என்பதாகும்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்பது ஒருவன் தேவனுடைய வார்த்தையின் போதனைக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவில் விசுவாசம்வைத்து, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு. தன்பாவங்கள் மன்னிக்கப்படும்பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, அதன்பின் கர்த்தர் அந்த மனிதனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை வாசியுங்கள் உண்மையாகவே அன்று எருசலேமிலிருந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் இவ்வளவு நேரமாக பயன்படுத்தப்பட்ட சிறிதும் தவறில்லாத அந்த வார்த்தைகளைத் தவிர மறுபடியும் பிறப்பதைக் குறித்துச் சொல்ல வேறொன்றும் கிடையாது, ஆனால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தபோது அது அவனை தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறது என்று கிறிஸ்து சொன்னதினால் அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் எனவும் மேலும் அப்போஸ்தலர் 2ம் ஆதிகாரத்தில் காண்கின்ற ஜனங்கள் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து சபையிலே சேர்துக்கொண்டார் என நாம் அறிகிறோம். ஆனால் ராஜ்யம் மற்றும் சபையைக் குறித்த காரியம் என்ன அவைகள் வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லையா? இல்லை, தேவவாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள படியால் ஒரே ஸ்தாபனம் அல்லது அமைப்பாக ராஜ்யம் மற்றும் சபை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறபடியினால் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லை. கொலோசெயார்1:14ல் உதாரணமாக கொலோசெய சபைக்கு பவுல் எழுதுகின்றான் இன்னும் அவன், ‘‘இருளின்



அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது’’ (கொலோ 1:13,14) என்கிறான். அப்போஸ்தலர் 2ல் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களெனவும் ஆனால் அப்போஸ்தலர் 8ல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் என அவ்வசனம் கூறுகிறது. (அப் 8:12) அப்.2-ல் குறிப்பிடப்பட்ட ஜனங்கள் சபை அங்கத்தினர்களாகவும் சமாரியர்கள் ராஜ்யத்தின் அங்கத்தினர்களாகவும் மாறி இவ்விதமாக இரு வேறுபட்ட அமைப்புகளாக இருந்தது என்று அர்த்தமாகிறதா? இல்லை அவைகள் இரண்டும் ஒரே அமைப்பாகவும் ஸ்தாபனமாகவும் இருக்கிறது.

ஆனபடியினால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறபோது அவன் கர்த்தருடைய வார்த்தையை கேள்விப்படுகிறான் அவன் அதை விசுவாசிக்கிறான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறான். கிறிஸ்துவில் கொண்டுள்ள தன்னுடைய நம்பிக்கையை, இவ்வாறாக அவன் இரட்சிக்கப்பட்டு அதன்பின் கர்த்தர் அவனை தம்முடைய சபையில் சேர்க்கிறார், அதாவது அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய குடும்ப அங்கத்தினனாக, ஒரு புதிய சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக, அவன் வளர்ந்து, பெருகி, விசுவாசத்தில் பலங்கொண்டு ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக இருப்பான். நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நித்தியஜீவனைக்குறித்த நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால், இதை நாம் செய்யவேண்டும். இதை நாம் ஒவ்வொருவருக்கும், மேலும் உலக முழுவதுக்கும் பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால், இதைச்செய்யும்வரை, நீங்கள் இழந்தவராகவும் இன்னும் இழந்து போகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ்வுலகத்திலும், வரப்போகிற உலகத்திலும் நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு மறுபடியும் பிறப்பதற்கு வேறு வழியே இல்லை. நீங்கள் இந்த காரியங்களை அறிந்து கொள்ளும் வரைக்கும் மேலும் நீங்கள் அவர் கற்பித்திருக்கிறபடி செய்யும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஜெபியுங்கள்

- இம்மாதம் சென்னையில் நடைபெறும் கூட்டங்களுக்காக...
- புதிய ஆத்துமாக்களுக்காக...
- விசுவாசக்குடும்பங்களுக்காக...
- வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக...
- உலக சமாதானத்திற்காக...
- வேதாகம பள்ளிக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**‘‘ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்’’ யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**